சென்னை சர்க்காருக்கு "முட்டாள் பட்டம்!"

Phone No 4502 — Regd. No. M. 5458
விலை அரை அணு — இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. — MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (22—5—50) ✤ வெளியூர் (23—5—50) [இதழ் 258

தேசீய 'தினசரி'யின் தீப்பொறி

"தமிழ் வளர்ச்சிக்கு ஆபத்து!"

மாஜி அமைச்சரின் 'மரணகீதம்'

இந்தி பற்றிய உத்தரவு கண்டனக்கணைகள்!

ஒவ்வொரு மாகாணங்களிலுமுள்ள எல்லா உயர்நிலைப்பள்ளிகளிலும் ஹிந்தி கட்டாய பாடமாக்கப்பட வேண்டும் என்று இந்திய சர்க்கார் புதுடில்லியிலிருந்து மே 19-ல் ஒரு உத்திரவு பிறப்பித்துள்ளனர். அதோடு மத்திய சர்க்காரில் வேலை பார்க்கும் 40 வயதுக்கு உட்பட்ட சகலரும் ஹிந்தி கற்கும் வகையில் 'ஸ்பெஷல்' ஹிந்தி வகுப்புகளை ஆரம்பிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

வடநாட்டு இந்தி ஆதிபத்தியம் வளர்ந்துகொண்டு வருகிறது, தன் கோரப்பற்களை நீட்டிய வண்ணம்! இந்த மொழி வெறி பற்றிய மூர்க்கத்தனம் காங்கிரஸ் வட்டாரத்திலேயே கலக்கத்தை உண்டு பண்ணியிருக்கிறது.

கோவையில் மே 20 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சி மாநாட்டில் பேசிய சென்னை முன்னாள் கல்வியமைச்சர் டி. எஸ். அவினாசிலிங்கம் அவர்கள் பேசியிருப்பது. இது:—

"இங்கிலீஷும் இந்தியும் முறையே இரண்டாவது, மூன்றாவது மொழிகளாகவிருக்கும். செகண்டரி பாடசாலையில் ஒவ்வொரு குழந்தையும் இவ்விரண்டையும் கட்டாயமாக வாசித்தேயாக வேண்டும். ஆனால், முதல் பாஷையாகக் கருதப்படும் பிரதேச பாஷை ஒவ்வொரு குழந்தையாலும் கற்கப்படவேண்டியதில்லை.... இதர இரண்டு பாஷைகள் (இந்தியும் இங்கிலீஷும்) அதிக மதிப்புக்குரியனவாயிருக்கும். இவ்வித ஏற்பாட்டைவிட தேசத்திற்கு வேறு பெரிய அனர்த்தமே இருக்க முடியாதென்று நான் நினைக்கிறேன்.

இதுவரையில் இங்கிலீஷின் ஆதிக்கத்திற்கு ஆளாயிருந்த நாம் இனி இந்தியின் ஆதிக்கத்திற்கு ஆளாகவேண்டியிருக்கும். நமது மொழியின் வளர்ச்சி தடைப்படும். நவீன விஷயங்கள் குறித்து நமது மொழியில் இலக்கியம் எதுவும் இல்லாமற்போகும். அதன் விளைவாக நமது மக்கள் அறியாமையிலும் வறுமையிலும் அழுந்திக் கிடக்க வேண்டியதுதான்.....இந்தி பேசும் மக்கள், தேசத்தின் இதர மக்கள் மீது தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சிக்கின்றனர். நான் கல்வி மந்திரியாக இருந்த போது, கல்வி மந்திரிகள், உப அத்யக்ஷகர்கள் மாநாட்டில், பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் இந்தி மூலம் போதனை செய்யவேண்டுமென்று ஒரு யோசனை கிளப்பினார்கள். அவ்வித திட்டத்தால் இந்தி பேசாத மக்களுக்கு விளையும் கெடுதிகளை உணர்ந்து நாங்கள் அந்த யோசனையை எதிர்த்தோம். அதன் பேரில் அந்த யோசனை கைவிடப்பட்டது. மத்திய கல்வி ஆலோசனை போர்டிலும் இந்த விஷயம் கொண்டுவரப்பட்டதென்று நான் அறிகிறேன் இத்தடவையும் அவர்கள் முயற்சி பலிக்காமற்போனால், இந்தப்போராட்டத்தை அவர்கள் விட்டுவிடமாட்டார்கள்"

சர்க்கார் உத்தரவு

அவினாசியார் அமைச்சராகயிருந்த [illegible] பிறப்பிக்கப்பட்ட [illegible] மாற்றி தற்போதைய கல்வியமைச்சர் மாதவமேனன் அண்மையில் பிறப்பித்த புது உத்திரவின் சுருக்கம்.

பிரதேச மொழி, முதல் மொழி. இந்தி, இரண்டாவது மொழி. ஆங்கிலம் மூன்றாவது மொழி.

இம்மூன்று மொழிகளும் செகண்டரி வகுப்புகளில் கட்டாயமாகப் போதிக்கப்பட வேண்டும், முதல் மொழியாக, பிரதேச மொழி தவிர்த்து (தமிழ் மொழியைத் தவிர்த்து) இந்தியை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். இந்தியை முதல் மொழியாக எடுத்துக்கொண்டோர் தமிழைக் கற்க வேண்டியது அவசியமில்லை.

"தினசரி"யார் தீப்பொறி

சென்னை சர்க்காரின் உத்திரவைக் குறித்து 20-ந்தேதிய இதழில் தலையங்கமாகத் "தினசரி"யார் தீட்டியிருப்பது இது:—தாய்பாஷையைப் பொறுத்த வரையில் சென்னை சர்க்காரின் உத்தரவு படுமோசமானதாக இருக்கிறது.

தாய்பாஷையாக பள்ளிக்கூடங்களில் முதல் மொழி என்று பெயரளவுக்குத்தான் இருக்குமேயொழிய நாளாவட்டத்தில் ஆங்கிலத்திற்கும் இந்திக்கும் அதிக மதிப்பு ஏற்பட்டு தாய்மொழியின் முக்கியத்துவம் அடியோடு மங்கிப் போகும் என்பதில் சந்தேகமில்லை.

தாய்பாஷை செகண்டரி பள்ளிக்கூடங்களில் கட்டாய மொழியாக்கப்படாமல் வேறு

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

இந்தியா பௌத்த மதத்தை தழுவ வேண்டும்

சட்ட மந்திரி அம்பேத்கார் கருத்து

சென்னை, மே. 21—

உலக பௌத்தர் மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கைக்குச் செல்லும் இந்திய சர்க்கார் சட்டமந்திரி டாக்டர் பி, ஆர். அம்பேத்கார் மே மாதம் 23ந்தேதி சென்னை வருகிறார்.

தோழர் அம்பேத்கார் இங்கு தங்கியிருக்கும்போது பென்ஷன் விசாரணைக் கோர்ட்டைப் பார்வையிடுவார். சென்னையிலிருந்து மே மாதம் 24-ந் தேதி இலங்கைக்குப் புறப்பட அவர் திட்டமிட்டிருக்கிறார்.

தாழ்த்தப்பட்டோர் கல்லூரி

ஹைதராபாத் சர்க்கார் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்துக்காக ஒதுக்கப்பட்ட ஒரு கோடி ரூபாயிலிருந்து பத்து லட்ச ரூபாய் செலவில் தாழ்த்தப்பட்டோர் கல்லூரியொன்றை அமைப்பதுபற்றி பேச்சு நடத்த டாக்டர் அம்பேத்கார் ஹைதராபாத்துக்கு வந்துள்ளார். உஸ்மானியா பல்கலைக் கழக அதிகாரிகளுடன் கல்லூரியமைப்பதுபற்றி தோழர் அம்பேத்கார் பேச்சுநடத்துவாரென்று அறியப்படுகிறது. அவுரங்கபாத்தில் அமைக்கப்பட போகும் இக்கல்லூரியைத் துவக்கிவைக்க இந்தியக் குடியரசுத் தலைவர் தோழர் ராஜேந்திரப்பிரசாத்தை அழைத்திருப்பதாக அவர் அறிவித்தார்.

இந்தியா புத்தர்வழிநிற்க வேண்டும்"

அவுரங்கபாத் கல்லூரியில் போதனாமொழி ஆங்கிலமாக இருக்குமென்று தோழர் அம்பேத்கார் கூறினார். பௌத்த மதத்தைக் தழுவப்போவதாக அறிவிக்கப்பட்டது உண்மைதானாவென்று கேட்டதற்கு 'நான் மட்டுமென்ன இந்தியா முழுவதும் புத்தர் வழிநின்று பௌத்த மதத்தை மேற்கொள்ளவேண்டியது அவசியம்" என்று தோழர் அம்பேத்கார் அறிவித்தார். புத்தரின் ஞானமொழிகளைப்பற்றிப் புத்தகமொன்று இப்பொழுது எழுதிக்கொண்டிருப்பதாகவும் விரைவில் "இந்தியா ஏன் பௌத்தமதத்தைத் தழுவவேண்டும்" என்னும் புத்தகத்தை எழுதப் போவதாக அவர் கூறினார்.

ஜப்பானியர் திறமை

டோக்கியோ, மே. 21—

பிரிட்டிஷ் யுனைடெட்ஸ்டேட்ஸ் ஜவுளி அது கோஷ்டியினர் தங்களிடம் அனுதாபம் காட்டுவோர்களை இருப்பதை பயன்படுத்திக்கொண்டு சில கட்டுப்பாடுகளை தளர்த்திக்கொள்ள ஜப்பானியர் அடிபோட்டு வருவதாகத்தெரிகிறது;

இங்கிலீஷ் கால்வாயில் ரஷ்யக் கப்பல்

(0)

உளவு அறியும் முயற்சி என சந்தேகம்

லண்டன், மே 21—

இங்கிலீஷ் கால்வாயில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் கடற்படை ஒத்திகையை இன்று நடத்தவிருந்த பிரதேசத்திற்கு அருகாமையில் சோவியத் டிராலர் கப்பல்களும் 'டக்' கப்பல்களும் காணப்பட்டது. இங்கு மிகவும் ஆச்சரியத்தை எழுப்பியிருக்கின்றன.

பால்மத் நோக்கி இவை சென்றதாகவும் அங்கே ஏற்கனவே சில நங்கூரம் பாய்ச்சியிருந்ததாகவும் அநேகமாக இவை பால்டிக்கிலிருந்து கருங்கடல் செல்பவைகளாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. இவைகள் மொத்தம் சுமார் 30 இருக்கும் என்றும் முதல் உலக யுத்தத்திற்கு பிறகு இவ்வளவு ரஷ்ய கப்பல்கள் மாற்றப்பட்டதில்லை என்றும் இவைகள் மூன்று மைல் தூர அளவுக்கு அப்பாலேயேதான் இருக்கின்றனவென்றும் கூறப்படுகிறது.

இக்கப்பல்களில் சில யுத்த உதவிக் கப்பல்க எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ளத்தக்கவை என்றும், இவைகள் சிலவற்றில் ராடார் சாதனம் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறது.

இவைகள் வெகு வேகமாக செல்லக்கூடியவை என்றே கருதப்படுகிறது. இக்கப்பல்கள் காணப்படுவது குறித்து கடற்படை அதிகாரிகள் கவலைப்படுவதாகத்தெரியவில்லை.

இவை வேண்டும் என்றே ஒத்திகை நடைபெறும் சமயத்தில் இங்கு வந்திருக்கிறதென்றாலும் ஒத்திகை விஷயமான உளவு எதையும் அவை தெரிந்துக்கொள்ள முடியாது என்றும் கூறப்படுகிறது.

ஆற்காட்டார் திறமையே திறமை!

(0)

முதலியார் சேவைக்கு பிரிட்டிஷ் பிரதிநிதிபாராட்டு

ஸிட்னி, மே 21—

ஸிட்னி மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதி தோழர் ஏ ராமசுவாமி அவர்கள் ஒரு முக்கிய புருஷராக விளங்கினார் என்றும், எவ்வளவோ அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டதை தீர்த்து வைக்க அவர் காரணமாக இருந்தார் என்றும் குளோப் நிருபர் கூறுகிறார்.

ஸிட்னி மாநாடு வெற்றியில் முடிந்ததற்கு தோழர் ஏ ராமசுவாமி அவர்களின் திறமையும் ஒரு முக்கிய காரணம் என்று குறிப்பிட்டு பிரிட்டிஷ் பிரதிநிதி லார்ட் மாக்டனலட் பாராட்டிப் பேசினார்.

நியூஜிலந்து கோஷ்டித் தலைவர் தோழர் டாயிட்ஜ் பேசுகையில், தோழர் ஏ ராமசுவாமி அவர்கள் எங்களுக்கு ஊக்கத்தைக் கொடுத்து வந்ததுடன் ஒரு வழிகாட்டியாகவும் இருந்தார் என்றும் புகழ்ந்தார்.

(குளோப்)

மாலை மணி

சென்னை 22—5—50 திங்கட்கிழமை

நெசவுத் தொழில்

திராவிடத்தின் முக்கிய குடிசைத்தொழில் கைத்தறி நெசவாகும். ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திராவிட நாட்டுத் தொழிலாளியின் கைத்திறன் யவனராலும், ரோம் நாட்டாராலும் பாராட்டிப் பெருமை படுத்தப்பட்டது; ரோமாபுரி ராணிகள் அணிந்திருந்த மெல்லாடைகள் திராவிடத்தின் 'சிறு குடிசை'களில் நெய்யப்பட்டனவையே தவிர நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் வேலை செய்யும் ஆலைகளில் ஆக்கப்பட்டவையல்ல. திராவிடம் தந்த பொருள்களுக்கு மாற்றுப் பொருளாகத் தர வேலைப்பாடு நிறைந்த பொருள்கள் யவனரிடமும் ரோம் நாட்டினரிடமும் இல்லாததால் அவர்கள் தந்தது பொன்னும் முத்தும். அன்று தமிழ் நாட்டின் குடிசைகளில் செய்யப்பட்ட துணிமணிகளுக்கு டாலரைவிட அதிக மதிப்பிருந்தது. அந்த மதிப்பு இன்றும் குறைந்துவிடவில்லையென்றே கூறலாம். அமெரிக்காவும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் கைத்தறிகளாலான போர்வைகளையும், மேஜைவிரிப்புகளையும் அதிகம் விரும்புகிறார்களென்று அறிவிக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம்.

கைத்தறி நெசவுக்குப் பண்டை நாளில் கையால் நூல் நூற்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டாலும், அப்பழக்கம் முன்னூறு ஆண்டுகளாக, அதாவது வெள்ளையர் திராவிடத்தின் கரையில் காலெடுத்து வைத்த நாளிலிருந்து மறைந்துவிட்டது. ஆலைகளில் நூற்கப்பட்ட நூலே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் குடிசைத் தொழிலாகிய கைத்தறி நெசவும் நூல் நூற்கும், ஆலைத் தொழிலும் அண்டி வளர்ந்துவந்ததுடன் ஆலைத்துணி உற்பத்தியும் ஓரளவுக்கு அபிவிருத்தியாகியிருந்தது.

வெள்ளையரை வெளியேற்றக் காந்தியார் மக்களின் உணர்ச்சியைத் தூண்டக் கொண்டுவந்த கதர்த் திட்டத்தைத் தோழர் பிரகாசம் காரு பிரதமரானவுடன், காந்தியாரிடத்தில் தன்மேலிருந்த அரசியல் காரணங்களால் ஏற்பட்ட வெறுப்பைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் மற்ற மாகாணங்களில் காங்கிரஸ் சர்க்கார் வற்புறுத்தாத கதர்த் திட்டத்தைச் சென்னையில் கட்டாயப்படுத்தி ஏராளமான பஞ்சைப் பாழாக்கிவிட்டார். மேலும் நூல் நூற்பு ஆலைகளுக்காகச் சென்னைக்கு ஒதுக்கப்பட்டிருந்த கதிர்களையும் வேண்டாமென்று கூறிவிட்டதால் நூல் நூற்பு ஆலைத் தொழிலும், குடிசைத் தொழிலாகிய கைத்தறி நெசவும் பெரிதும் பாதிக்கப்பட்டன.

இதனால் கைத்தறித் தொழிலையே பிழைப்பாகக் கொண்டுள்ள 10,83,758 பேர் வேலை இழந்து திண்டாடினார்கள். பரம்பரை பரம்பரையாகக் கைத்தறி நெசவில் ஈடுபட்டிருந்த இவ்வளவு தொழிலாளிகள் அவதிப்பட, கோவை நூல் நூற்பு ஆலைகள் மூடப்பட்டதால் தொழிலாளரின் குடும்பங்கள் பசியால்வாட, காங்கிரஸ் பக்தர்கள் தக்களிகொண்டு நூல் நூற்றுப் பஞ்சைப் பாழாக்கும் படலத்தில் ஈடுபட்டிருந்தார்கள். வளர்ச்சி பெற்றிருந்த ஒரு தொழிலை அழிக்க முற்பட்டார் என்ற குற்றம் சாட்டிப் பிரகாசம்காரு அன்றே வழக்கு மன்றத்தில் நிற்க வைக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் ஆளவந்தவர்கள் ஆட்சிக்கே புதியவர்களாகையால், நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்பைக் கண்டு பயந்து தோழர் பிரகாசத்தைப் பதவியிலிருந்து மட்டும் நீக்கிவிட்டார்கள். ஆனால் தொடர்ந்து அவர்கள் கைபிடிக்கும் கொள்கை சிறிதும் முன்னேற்றமுள்ளதாகக் காணோம்.

நாட்டைத் தொழில் மயமாக்க வேண்டுமானால் குடிசைத் தொழிலை இயந்திரத் தொழிலோடு இணைத்து வளர்த்தால் இயந்திரத் தொழில்வளர்ந்துநாடுதொழில் மயமான பிறகு குடிசைத் தொழில் தானாகவே மறைந்துவிடுமென்று கூறியுள்ளோம். அதையேதான் இந்திய சர்க்கார் காப்புவரி அங்கத்தினர் தோழர் பி. எஸ். நாயுடு சேலத்தில் குடிசைத்தொழில் வளர்ச்சியைப்பற்றிப் பேசும்போது கூறியுள்ளார். ஆனால் கவைக்குதவாத கதர்திட்டங்களைக் கொண்டுவரும் காங்கிரஸ் சர்க்கார் குடிசைத்தொழிலை வளர்ப்பதாகக்கூறி வேரைக் களைந்து வெந்நீர் விடுவதுடன, இயந்திரத் தொழிலில் நாடுமுன்னேறுவதற்குப் பெருந் தடையாக உள்ளனர்.

விவசாய நாடாகிய திராவிடம் இயந்திரத் தொழில் மயமான நாடாவதற்கு முன் குடிசைத்தொழிலைப் போற்றி வளர்க்கவேண்டுவது மிக அவசியமாகும் திராவிடத்தின் 27,50,000 மக்கள் அதாவது 5½ சதவிகிதம் கைத்தறி நெசவால் வாழ்க்கை நடத்துகிறார்கள். இன்று கைத்தறி நெசவுத் துணிகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளதால் வேண்டுமளவு நூல்கிடைக்கும்படிச் செய்யவேண்டும். இதனால் ஆலைத்தொழிலும் அதிகரிக்கும். கைத்தறி நெசவாளர் கூட்டுக் கழகங்களை அமைத்து அயல் நாட்டு ஏற்றுமதிக்கான வசதிகள் செய்துதர வேண்டும். ஏழை நெசவாளிகள் கடன் தொல்லையால் பாதிக்கப்பட்டு அல்லலப்படுவதைத் தடுக்கக் கடன் உதவிக்கான ஏற்பாடுகள் செய்வது நலம்.

ஆளவந்தார் நெசவாளருக்கு வசதிகள் செய்துகொடுக்க முன்வராவிட்டால், தொல்லைகளாவது கொடுக்காமல் இருப்பது நலனாகும்.

சென்னை சர்க்காருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டுமொழிகள் கட்டாயமாக்கப்படும்போது கல்வி போதனை தாய்மொழியிலேயே இருக்க வேண்டும் என்பது மாத்திரம் எப்படி நிலைத்திருக்கமுடியும்? நிலைத்திருப்பதாகவே வைத்துக்கொண்டாலும், தாய்பாஷை வளர்ச்சியடையும் என்று எப்படி எதிர்பார்க்கமுடியும்?...கொஞ்ச நாளானதும் எல்லோரும் படிக்கும் பாஷை எதுவோ அதுவே படிப்பு போதனை மொழியாக இருக்கட்டும் என்று ஆகிவிடவும் கூடும்....

சர்க்கார் பிறப்பித்திருக்கும் உத்திரவு தாய் பாஷையை உயர்ந்த நிலையில் வைக்க உதவியாக இருக்கிறதென்று யாருமே சொல்லமாட்டார்கள்... ஸ்ரீ அவினாசி சொல்லும் இன்னுமொரு விஷயத்தைக் கவனித்தால எல்லா பள்ளிக்கூடங்களிலும் கலேஜிகளிலும் இந்தியையே போதனா மொழியாக்கிவிட வேண்டும் என்ற முயர்சியை இந்திவாலாக்கள் இடைவிடாது செய்துகொண்டு வருகிறார்கள் என்பது தெளிவாகிறதுதாம். கல்வி மந்திரியாகயிருந்த சமயத்தில் நடந்தவைகள சான்ஸ்சலர்கள் மாநாட்டில் நாடெங்கும் இந்தியையே போதனா மொழியாக்கிவிட முயற்சிகள் நடந்தனவென்று தோழர் அவினாசி சொல்கிறார். ஆகையால் பிராந்திய தாய் மொழிகளின் முக்கியத்தை ஒழித்துவிட்டு இந்தி ஆதிக்கத்தையே ஸ்திரப்படுத்திவிடுவது என்ற முயற்சியும் பலமாக இருந்து வருகிறது என்பது மறுக்கமுடியாத விஷயம்.

சென்னை சர்க்கார் தாய் மொழிக்கு எந்தவித ஆபத்தும் வந்து விடக்கூடாதென் பதிலும் உஷாராக இருக்க தவறிவிட்டது. வருந்தத்தக்காகும்...தாய்மொழி வளர்ச்சிக்கு இடையூறு செய்ய விடக்கூடிய முட்டாள் தனமான ஒரு உத்தரவை சென்னை சர்க்கார் எப்படி போட்டது என்பதுதான் நமக்கு விளங்கவில்லை...

போலீஸ் போர்வையில் ராணுவமா?

லண்டன், மே. 21—

கிழக்கு ஜெர்மனியில் மக்கள் போலீஸ்படை அமைப்பதாகச் சொல்லிக்கொண்டு ஆயுதம்தரித்த ஜெர்மன் ராணுவத்தையே ரஷ்யா அமைத்து வருவதைக் குறித்து தீவிரமாக ஆட்சேபித்து பிரிட்டன் யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரான்ஸ் ஆகிய மூவல்லரசுகளும் ரஷ்யாவுக்கு கண்டனக்குறிப்பை தனித்தனியாக அடுத்த வாரம் அனுப்பும் என்று தெரிகிறது.

இம்மாதிரிக்கண்டனக் குறிப்பு அனுப்புவதென்பது மூவல்லரசு மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. —ரூனேப்

ஹனுமானுக்கு ஏற்பட்ட ஆபத்து!

ஓலம் போடுகிறார்கள் சென்னை சர்க்கார்

சென்னை சர்க்காருக்குச் சொந்தமான "ஹனுமான்" விமானத்தை விற்றுவிடுவதாகச் சர்க்கார் பத்திரிகைகளில் விளம்பரம் போட்டிருக்கிறார்கள். இந்த விமானம் 1948-ல் ஓமந்தூரார் ஆட்சி காலத்தில் ரூ. 2,65 490 ரூபாய்க்கு வாங்கப்பட்டது. மந்திரிகள் பவனி வருவதிற்காக வாங்கப்பட்ட இவ்விமானத்துக்கு மாதமொன்றுக்கு ரூ. 500 செலவாகிவந்தது. இது சென்னைக்கு 300-மைல் தொலைவில் உள்ள பெங்களூர் விமானநிலையத்தில் வைக்கப்பட்டு மந்திரிகள் வேண்டுமென்று கோரும்போது சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு உபயோகிக்கப்படும்.

ஹனுமானை விற்றுவிடுவதிற்குச் சென்னை சர்க்கார் கொடுக்கும் காரணம், இந்தியாவில் இப்பொழுது விமானப்போக்குவரத்து அதிகப்பட்டுவிட்டதென்பதாகும். இவ்வாறு வசதிகள் இருக்கும் நேரத்தில் தமக்கென்று ஒரு விமானத்தைவைத்துக் கொண்டிருப்பது செலவை இரட்டிப்பதாகுமென்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ரூ. 1,80000 கொடுத்தால் இப்பொழுது விமானத்தைக் கொடுத்துவிடுகிறார்களாம்!

விமானத்தை விற்பதற்கு முக்கிய காரணமாகச் சர்க்கார் கூறுவது விமானப் போக்குவரத்து அதிகரித்துவிட்டதென்பதாகும். 1948 ல் ஓமந்தூரார் விமானம் வாங்கியபோது விமானக் கம்பெனிகளில் இரண்டு மூடப்பட்டுள்ளன. அவைகள்; "டெக்கான் ஏர்வேஸ்" "ஜுபிடர் ஏர்வேஸ்" [illegible]கும். அப்படியிருந்தும் விமானப் போக்குவரத்து அதிகரித்துவிட்டதாக நொண்டிச் சாக்கு கூறுகிறார்கள். மற்றும் தனியாக ஒரு விமானத்தை வைத்துக் கொண்டிருப்பது சிக்கனமான முறையல்லவென்று கண்டுபிடித்துவிட்டார்கள் கதருடை வேஷதாரிகள்! மாதத்துக்கு 5000மாக மூன்று வருடங்களுக்கு ரூ. 1,80 000க்கு மேல் இன்று விமானத்தை விற்கும் விலை அவ்வளவு பணத்தைநஷ்டமாக்கிய பின்புதான் 'ஹனுமான்' சிரஞ்சீவியாக இருப்பது ஆகாத காரணம் என்று முடிவுசெய்துள்ளார்கள் விமானம் வாங்கிய விலை ரூ. 2,65,000, இன்று விற்கும் விலை ரூ. 1,80,000, ஒரு லட்ச ரூபாய் குறைத்து. ஆக மக்கள் வரிப்பணம் மூன்று லட்ச ரூபாய் மந்திரிமார்களின் முன்யோசனை இல்லாத காரணத்தால் விரயமாகியுள்ளது.

கவைக்குதவாத திட்டங்களால் வேறு பணத்தைப் பாழாக்குவதுடன் எதேச்சாதிகார விளையாட்டுகளால் வேறு மக்களைப் புண்படுத்தும்வகையில் சர்க்கார் நடந்துகொள்வதைப் பொதுமக்கள் எவ்வளவுநாள்தான் பொறுத்துக் கொண்டிருப்பார்களோ?

சாந்திநிகேதனில் புத்தமத நிலையம்

ரங்கூன், மே 21—

சாந்திநிகேதனில் ஒரு புத்தமத நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக இங்கிருந்து 5 பர்மிய சந்நியாசிகள் இந்தியாவுக்கு செல்லவிருக்கிறார்கள்.

சாந்திநிகேதனில் தாம் ஆராய்ச்சி செய்யும்படியான அநேக ஏராளமான புத்தமத கிரந்தங்கள் இருக்கின்றன.

பாக், இந்திய அமைச்சர்கள் பவனி

புதுடில்லி, மே 21—

பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரி தோழர் ஷ புதீன் ஜுன் மாதத்தில் கிழக்குப் பாகிஸ்தானில் சுற்றுப்பிரயாணம் செய்ய உத்தேசித்திருக்கிறார். கராச்சியிலிருந்து டாக்கா செல்லும் வழியில் ஜுன் 7-ந் தேதி இவர் புதுடில்லிக்கு வருவார்.

இந்தியா மந்திரி தோழர் ஆர். ஆர். திவாகரும் கிழக்கு பாகிஸ்தானில் சுற்றுப்பிரயாணம் செய்ய திட்டம் போட்டிருக்கிறார். இவர் டாக்காவில் தோழர் ஷகாபுதீனை சந்தித்து பின்பு இருவரும் சேர்ந்தே சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்வர்.

இந்தியா, பாகிஸ்தான் நல்லுறவு கழகமும், அதன் தலைவர் தோழர் ஜுகல்கிஷோர் தலைமையில் ஒரு நல்லெண்ண தூதுகோஷ்டியை கிழக்குப் பாகிஸ்தானுக்கு அனுப்பவிருக்கிறது. இக்குழுவினர் பத்து நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்வர்.

(ரூனேப்)

இந்திய அகதிகளுக்கு ஆங்கிலேயர் உதவி

லண்டன், மே 21—

இந்தியாவில் அகதிகள் நிவாரண விஷயமாக சேவை செய்ய 17 சமூக தொண்டர்கள் கொண்ட ஒரு கோஷ்டியை பிரிட்டன் அனுப்பவிருக்கிறது. ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள 6 பேர்களுடன் இவர்களும் சேர்ந்து சேவை செய்வர். இந்த சமூக சேவைக்காக பிரிட்டனில் ரூ. 19000 நிதிக்காக கோரிக்கை விடப்பட்டிருக்கிறது.

இந்த நிதி திரட்டும் வேலையையும் தொண்டர்களை அனுப்புவதையும் செய்திருப்பது 'சர்வீஸ் சிவில் இண்டர் நேஷனல்' என்ற ஸ்தாபனமாகும்.

இதன் அதிகாரி ஒருவர் கூறுகையில் இந்த ஸ்தாபனம் செய்யும் வேலைகளுக்கு இந்தியாவில் பரிபூரணஒத்துழைப்பு கிடைக்கிறதென்றும், இதன் வேலையில் ஜனாதிபதி ராஜேந்திரபிரசாத் மிகவும் சிரத்தை காட்டுகிறார் என்றும் அவர் கூறினார்.

பீகார் பூகம்பத்தின்போது இந்த ஸ்தாபனம் இதன் ஸ்தாபகர் பியரிசிரஸ்போல் தலைமையில் இந்தியாவில் புதுசேரிங்களை அமைக்க சேவை செய்தது என்றும் அப்பொழுது பாபுராஜேந்திர பிரசாத்துடன் ஒத்துழைத்து வேலைசெய்யும் பாக்கியம் இந்த ஸ்தாபனத்திற்கு கிடைத்தது என்றும் அவர் கூறினார்.

இந்த சமூக ஊழியர்களுக்கு சம்பளம் கிடையாது இவர்கள் 18 மாதம் இந்தியாவில் இருந்து சேவை செய்வதென உறுதிகொண்டிருக்கின்றனர். இவர்களின் செலவை இந்திய அதிகாரிகளே ஏற்கின்றனர்,

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. கமிட்டித் தேர்தல்

—(0)—

செங்கற்பட்டுமாவட்டதிரா விட முன்னேற்றக் கழக தேர்தல் கூட்டம், 19-3-50 மாலை 6-மணிக்கு காஞ்சிபுரம் 'திராவிடநாடு' நிலையத்தில் நடைபெற்றது அமைப்புக்குழுசெயலாளர் தோழர் என் வி. நடராஜன் தலைமை வகித்தார்.

கிளைக் கழகங்களிலிருந்து இரண்டுபேர் வீதம் இதுவரை தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ள பிரதிநிதிகள் 28-ல, 20 உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

கூட்டத்திற்கு வர முடியாமைக்கும், வருந்தி எழுதி அனுப்பியுள்ள உறுப்பினர்களின் கடிதங்கள் வாசிக்கப்பட்டன.

துவக்கத்தில், தோழர் என் வி. என். மாவட்ட அமைப்பு சம்பந்தமானவைகளை எடுத்துக் கூறினர்.

கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதிகளை மாவட்டக்கமிட்டி உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொள்ளப்பட்டது.

பின்னர் அவ்வுறுப்பினர்களிலிருந்து கீழ்க்கண்டவாறு செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்:—தோழர் சி. வி. எம். அண்ணாமலை; துணைச் செயலாளர்:—காஞ்சி எதிராசன், திருவள்ளூர் நீடின்பன்; விளம்பர உறுப்பினர்:—சா கோ. பெருமாள்; பொருளாளர்:—திருக்கழுக்குன்றப் துரைசாமி.

துணைச்செயலாளர், தேர்வு மட்டும் ஓட்டெடுப்புமூலமும், மற்றவர்களை ஒரேமனதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது

செங்கற்பட்டு மாவட்டக் குழுவின் அலுவலகத்தை காஞ்சியிலேயே நிறுவுவதென்று முடிவு செய்யப்பட்டது

முதலாவதாக மாவட்டத்தின் முக்கிய பகுதிகளில் பிரசாரக்கூட்டங்கள் நடத்துவதென்றும், அடுத்து மாவட்ட மாநாட்டை நடத்த ஆவனசெய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மாவட்டக்குழுவின் ஆரம்ப செலவுக்காக ஒவ்வொரு கிளைக்கழகமும் குறைந்தது ஐந்து ரூபாய் வீதம் நன்கொடையளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தலைமை வகித்த அமைப்புக் குழு செயலாளர் தோழர் என். வி. என். முடிவுரையாகப் பேசுகையில், செங்கற்பட்டுமாவட்டத்திற்கு இன்று தேர்ந்தெடுக்கப்பட்ட இச் செயற்குழுவினர் மற்ற மாவட்டங்களைப் போல முன்னணியில் நிற்கும் அளவுக்குத் தீவிரமாக உழைத்தல் வேண்டுமென்றும், கிளைக் கழகத்தினர் மாவட்டக்கழகத்துடன் அவ்வப்போது தொடர்புகொண்டு உறுப்பினர் சேர்த்தல், கிளைக் கழகங்களை நிறுத்தல் மற்று இயக்க வளர்ச்சிக்கான ஆக்க வேலைகள் செய்தல் ஆகியவைகளில் பேரூக்கம் காட்ட வேண்டுமென்றும், இன்றைய தேர்தல் கூட்டம் வெற்றிகரமாகவும், ஜனநாயக அமைப்பு முறையிலும் நடந்தேற தலைமைக் கழக வேண்டுகோளின் படி யாவரும் ஒத்துழைத்தமைக்கு வணக்கம் செலுத்துவதாகவும் அனைவரும் மேலும் கட்டுப்பாட்டுடனும் கொள்கை உணர்ச்சியுடனும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

செயலாளர் தோழர் சி. வி எம். அண்ணாமலை அனைவருக்கும் நன்றிகூற தேர்தல் கூட்டம் இரவு 7-45 மணிக்கு இனி முடிவுற்றது.

பெற்றோர்களை அறியாத 13-வயது சிறுமி

சிங்கப்பூர், மே 21—

பிறந்தது முதல் பெற்றோர்களை விட்டுப் பிரிந்து ஒரு வளர்ப்பு தாயிடம் 13-வருட காலம் வளர்க்கப்பட்ட டச்சு சிறுமி பெர்தா ஹார்ட்லேண்ட் ஹாலந்திலுள்ள தாய் தகப்பனிடம் போய் வாழ வேண்டும் என்று சிங்கப்பூர் கோர்ட் தீர்ப்பு கூறியிருக்கிறது

டச்சு ராணுவ சார்ஜெண்டின் குமாரியான இவள் ஜப்பானிய படையெடுப்பின்போது பெற்றோர்களிடமிருந்து பிரிந்துவிட்டாள். இவளை ஒரு மலாய் மாது அன்புடன் வளர்த்து வந்திருக்கிறாள்.

தன் வளர்ப்புத்தாயை விட்டுப் பிரிய சிறுமிக்கு கொஞ்சங்கூட இஷ்டமில்லை. அந்த மலாய் மாது கூட செல்ல போதிய பணம் கையில் இல்லாத நிலைமையில் இருக்கிறாள்.

இச்சிறுமிக்கு மலேபாஷை மட்டுமே பேசத்தெரியும். இவள் முஸ்லிம் மதத்தை தழுவியிருக்கிறாள்.

பாக்தாதில் வெள்ளக் கொடுமை

பாக்தாத், மே 21—

பாக்தாதில் ஏற்பட்ட வெள்ளக் கொடுமைக்கு காரணம் நீர்ப்பாசன இலாகா அதிகாரியின் திறமையின்மையே காரணம் என்று இப்பொழுது [illegible] இந்த வெள்ளத்தினால் 20,000 பேர் தங்க வீடில்லாமல் தவிப்பதுடன் 1000,000 தினார்கள் நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது.

கட்டாரா அணை தேக்கத்தின் பம்பிங் ஸ்டேஷனில் ஒருமுக்கியமான இயந்திரத்தில் ஒரு பாகத்தை அதிகாரி ஒருவர் கழற்றிவிட்டார் என்றும் அதனால்தான் இந்த வெள்ளம் தடுக்க முடியாமல்போனது என்றும் கூறப்படுகிறது. இந்த அதிகாரி டிஸ்மிஸ் செய்யப்பட்டிருப்பதாகவும் இவர்மீது கிரிமினல்வழக்குத் தொடருவதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்றும் இராக் மராமத்திலாகா மந்திரி அறிவித்தார்.

அதிசய ஓவியம்

லண்டன், மே. 21—

ஜான்ஸ்டன் என்ற பிரபல சைத்திரிகரால் எழுதப்பட்ட படம் இப்பொழுது ஒருவருக்கு 10,000 பவுனுக்கு விற்கப்பட்டிருக்கிறது. 1941ல் பாரிஸ் கன்சர்வேடரியிலிருந்து ஜெர்மானியர்கள் இதைக் கைப்பற்றிச் சென்றனர். ஜெர்மன் வீழ்ச்சிக்குப்பின் ஒரு ஜெர்மன் வியாபாரி ஒருவர் இதை 'அபேஸ்' செய்துகொண்டு சென்று ஒரு சுவற்றினுள் வைத்து மேலே கற்களை எழுப்பிவிட்டார். ஆனால் இது எப்படியோ கண்டுபிடிக்கப்பட்டு விட்டது

ரஷியாவை மிரட்டுகிறது பிரிட்டன்

லண்டன், மே 21—

துருக்கி, கிரீஸ், பர்சியா மற்றும் சுதந்திரத்தை பாதுகாத்துக்கொள்ள விரும்பும் நாடுகளுக்கு நேரிடையான உதவியை தொடர்ந்து பிரிட்டன் அளித்துவரும் என்று பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி பெவின் கூறியது துருக்கி கிரீஸ், பர்சியா சுதந்திரத்தில் கைவைக்காதே என்று ரஷ்யாவை பிரிட்டன் எச்சரிப்பது போல் ஆகும் என்று இங்குள்ள ராஜதந்திர வட்டாரங்களில் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் மந்திரி பெவினின் இந்த அறிக்கை அம்மூன்று நாடுகளுக்கும் உற்சாகமூட்டியிருக்கவேண்டும் என்றும் இங்கு கூறப்படுகிறது

ராஜகுமாரி குமஸ்தாவை மணப்பார்

லண்டன் மே. 21—

ஒப்பாரனிய மன்னர் ஹீகோ ஹிடோரன் இரண்டாவது குமாரி டாரா (20 வயது) வாரம் 30 ஷில்லிங் சம்பளம் பெறும் ஒரு குமாஸ்தாவை மணக்க உத்தேசித்திருக்கிறார்.

பாகிஸ்தானுக்கு செல்ல விரும்பும் இந்தியர்கள்

புதுடில்லி மே. 21—

மேற்கு பாகிஸ்தானுக்கு செல்ல விரும்பும் இந்தியர்களுக்கு அளிக்கப்படும் பர்மிட் விஷயமாக உள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன என்று புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனரைச் சேர்ந்த ஒரு அதிகாரி குனோப் பிருபரிடம் கூறினார்,

இனி இந்தியர்கள் உல்லாச யாத்திரையாக பாகிஸ்தான் போய் வருவது சாத்யம். முன்பெல்லாம் பர்மிட் வாங்கவேண்டும் என்றால் பாகிஸ்தான் செல்லவேண்டிய மிக அவசரமான காரியம் என்ன என்பதை வெளியிடவேண்டும். பர்மிட் முறை ஏற்பட்டதிலிருந்து இப்பொழுதுதான் உல்லாசபிரயாணத்திற்காக ஒருவர் பாகிஸ்தானில் இவ்வாறு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இதனால் பர்மிட் கோரிப்பது மிகவும் அதிகரித்திருக்கிறது.

இந்தியாவுக்கு விஜயம் செய்ய விரும்பும் பாக். முஸ்லீம்களுக்கு பர்மிட்களை தாராளமாக வழங்கும்படி இந்திய சர்க்கார் பாகிஸ்தானிலுள்ள தங்கள் ஸ்தானிகாலய அதிகாரிகளுக்கு உத்திரவிட்டிருக்கின்றன. இதனால் இந்தியாவில் பாகிஸ்தானிகளின் விஜயமும் அதிகரித்திருக்கிறது.

இனி நடப்பவை

கொண்டயம்பட்டி:— 23 5 50 செவ்வாய் மாலை 5-30 மணிக்கு பந்தடி மைதானத்தில் தி. மு. க. பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது மதுரை எஸ். மூர்த்தி, அழகாபுரிசின்னகணபதி ஆகியோர் பேசுவர்.

* * *

பட்டாபிராம் கிராம சீர்திருத்த சங்கப்பொதுக்கூட்டம்:—23-5-50 மாலை 5 மணிக்கு பட்டாபிராம் போலீஸ் ஸ்டேஷன் அருகில் நடைபெறும். சட்டசபை தலைவர் தோழர் ஜே. சிவசண்முகம் எம். ஏ. பி. எல். தலைமைவகிப்பார் தோழர்கள் டி. எஸ். வேலன், என். சி பாலையா, டி. கே. கிருஷ்ண சாமி மற்றும் பலர் பேசுவர்.

வீடுதோறும்

இருக்கவேண்டிய புதுமை ஏடுகள்

(C. N. A. தீட்டியவை)

சாது, ஜெபமாலை,
மாடி வீடு, செவ்வாழை,
வாழ்க்கைப்புயல்,
சிந்தனைவிருந்து,
செல்லப்பிள்ளை,
ரங்கோன் ராதா

கருத்துக்குக் களிப்பூட்டும் கதைகள்
வாழ்க்கைப் பிரச்னைகளை விளக்கும் ஏடுகள்
சுவையும் பயனும் தரும் சுவடிகள்

கோவை, முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டுக் கொட்டகையில் கிடைக்கும்

பரிமளம் பதிப்பகம்,
காஞ்சீபுரம்.

பொடி விஷயம்!

லண்டன், மே 21—

சிகரெட் பிடிப்பது நாகரிகம் என்று நினைத்து அதை புகைத்து தள்ளுபவர்கள் மிகவும் கர்நாடகமானது என்று கருதப்படும் மூக்குப்பொடியை போடுவதன் மூலம், சிக்கனம் செய்யலாம் என்பதுடன் உடல் நலத்தையும் கெடுத்துக் கொள்ளாமல் இருக்கலாம் என்று 'பிரிட்டிஷ் மெடிகல் ஜெனால்' எழுதியிருக்கிறது.

அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:—

தினம் சிகரெட்டை மிதமின்றி பிடிக்காதவர் மாதம் ரூ. 65 மிச்சப்படுத்தலாம். 5 ஷில்லிங்கிற்கு கிடைக்கும் ஒரு அவுன்ஸ் பொடியினால் கிடைக்கும் திருப்தியைப்பெற குறைந்தது 20 சிகரெட்டாவது பிடிக்க வேண்டியிருக்கும்.

பொடி போட ஆரம்பிப்பதால் சளி கட்டாது, ஜலதோஷத்தைக் குணப்படுத்தும், நிகோடைன் விஷத்தினால் ஏற்படும் அவதிகளை தடுக்கலாம்.

கொள்ளைக் கூட்டத்தினர் அட்டூழியம்

சிங்கப்பூர், மே 21—

ஒரு பெண் உள்பட 4 பேர் கொண்ட கொள்ளை கோஷ்டி ஒரு குடிசைக்குள்புகுந்து ஒருபெண்ணையும் அவளுடைய இரு குழந்தைகளையும் கொலை செய்துள்ளதாக செய்தி கிடைத்திருக்கிறது.

ரிக்ஷாக்களை ஒழிக்க முடிவு

பெங்களூர் கார்ப்பரேஷனின் திட்டம்

பெங்களூர், மே 20—

பெங்களூரில் உள்ள ரிக்ஷா பிரயாண முறையை ஒழிக்க பெங்களூர் கார்ப்பரேஷன் முடிவு செய்துள்ளது

கார்ப்பரேஷன் கூட்டத்துக்கு மேயர் சேஷ அய்யங்கார் தலைமை வகித்தார்.

கஞ்சப்பா, வி. ஆர். நாயுடு, தேவதாஸ், சாமராஜ அய்யங்கார் ரங்கய்யா, முதலிய கவுன்சிலர்கள் தீர்மானத்தை ஆதரித்தனர். ரிக்ஷா இழுப்பது மனித சமுதாயத்துக்கே கேவலமானது என்று இவர்கள் பேசினர்.

தீனதயாளு நாயுடுவும், திருமதி வெப்ஸ்டரும் தீர்மானத்தை எதிர்த்தனர். குறைவான கட்டணம் செலுத்தி போகக்கூடிய வண்டிகள் ஏற்படாதவரையில் ரிக்ஷா முறையை நீக்கக்கூடாது என்று இவர்கள் கூறினர். மெஜாரிடி வோட்டுகளுடன் தீர்மானம் நிறைவேறிற்று.

காந்திக்கு ஜே சொன்ன பணம் செலுத்துவதிலிருந்து கார்ப்பரேஷன் கவுன்சிலர்களுக்கும், அதிகாரிகளுக்கும் விலக்கு அளிக்கும் தீர்மானமொன்று நிறைவேறியது. மைசூர் பிஷப் குருசர் ரவின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

23 - 5 - 50

இடப்பாடி (சேலம்):—என். வி. நடராசன்
கொண்டயம்பட்டி:—சி. பி. சிற்றரசு, எஸ். முத்து, சின்னகணபதி

24 - 5 - 50

தென்திருப்பேரை:—எம். எஸ். இராமசாமி

25—5—50

பார்த்தனம்:—எம். எஸ். இராமசாமி

கார்ன்வாலிஸ் போகிறார், காந்தியார் வருகிறார்!

கன்னிமாரா நூல் நிலையத்தில் காந்தியார் சிலை

சென்ற 42 ஆண்டுகாலமாக கன்னிமாரா லைப்ரரியில் இருந்த லார்ட் கார்ன் வாலிஸ் சலவைக் கல் சிலை, அடுத்த வாரம் கோட்டை மியூஸியத்திற்கு அகற்றப்பட்டுவிடும் என்று தெரிகிறது.

மகாத்மாகாந்தி உட்கார்ந்த நிலையில் பிரார்த்தனையிலிருப்பதாக சித்தரிக்கும் உருவச் சிலை, லைப்ரரியில் கார்ன்வாலிஸ் சிலை இருந்த இடத்தில் வைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச்சிலையின் களிமண் மாடலை செய்தவர் சென்னை சிற்ப கலாசாலையின் தலைவர் தோழியர் தேவி, பிரசாத்ராய் சௌதரி. இந்த மாடல்படி சிலையை வெணகலத்தில் வார்க்க இதாலிக்கு அனுப்பப்பட்டிருக்கிறதாம.

கார்ன் வாலிஸ் சிலையை அகற்றும் வேலை திங்களன்று ஆரம்பமாகும் எனத் தெரிகிறது.

கார்ன் வாலிஸ் சிலை

வைஸ்ராய் லார்ட் கார்ன் வாலிஸின் இந்த சலவைக் கல் சிலை, முதலில் துறைமுகத்தைப் பார்த்து இருக்கும்படி சென்னை கலெக்டர் ஆபீஸ் காம்பவுண்டில் வைக்கப்பட்டிருந்தது.

அந்தச் சிலைக்கு அடியில், திப்பு சுல்தான தன் இரு குமாரர்களை கார்ன் வாலிஸிடம் ஒப்படைப்பதாக ஒரு சித்திரம் காணப்படுகிறது. அமைதி நிலவச் செய்ய பணயமாக தன் குமாரர்களை ஒப்படைப்பதாக உள்ள சரித்திரச் சம்பவமே இவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இதை ஸ்தல முஸ்லிமகள் மிகவும் ஆட்சேபித்ததுடன், சிலைக்கும் சேதம் ஏற்படுத்தும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டுவிட்டதால் கோட்டைக்கு அகற்றப்பட்டது.

பின்னர் 1908 ல் இது கனிமாரா லைப்ரரிக்கு அகற்றப்பட்டது. இச் சிலையைச் செய்தவர் தாமஸ் பாங்க் என்ற பிரபல சிற்பி. (குளோப்)

அடுத்து அடைக்கலம் புகும் இடம் எது?

சியாங் கும்பல் இடம் தேடுகிறது

போர்மோசாவை கம்யூனிஸ்டுகள் தாக்கினால் அது அதிக நாட்கள் தாக்குப்பிடிக்காது என்று ஹாங்காங்கில் கருதப்படுகிறது. குஷான் தீவுகளைக் கைவிட்டதினால், சியாங் படைகளின் நிலைமை இன்னும் மோசமாகி விட்டது என்றும, போர்மோசாவை விடாமல் காக்கவேண்டியிருந்தால் குடானை கைவிட்டிருக்கக்கூடாது என்றும் ஹாங்காங்கில் கூறப்படுகிறது.

போர்மோசாவுக்கு ஆபத்து வந்தால், எங்கே வெளியேறுவது என்ற பிரச்னை சீனர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

கீழ்க்கோடிக்கு உதவி அதிகரிக்கிறது

கீழ்க்கோடி ராணுவ உதவி செய்யும் திட்டத்திற்கு அதிகப் பணம் ஒதுக்கும்படி பிரஸிடெண்ட் ட்ரூமன் காங்கிரஸைக் கேட்பார் என்று தெரிகிறது.

அமெரிக்காவின் உதவிக்காக 40,00,00 000 ஸ்டர்லிங் (ரூ. 250 கோடி) கேட்கப்படும் என்றும், இதில் கொரியா, பிலிப்பைன் நாடுகளும் உதவி பெறும், இதனால் உதவி பெறும் இதர நாடுகள் பர்மா, சியாம், இந்தோசீனா முதலியவை.

காமன்வெல்த்திற்கு "டெக்னிகல்" உதவி

காமன்வெல்த்திற்கு டெக்னிகல் உதவி அளிக்கும் திட்டத்தின் பொறுப்பு பிரிட்டன், ஆஸ்திரேலியா இந்தியா இலங்கை நியூஜிலாந்து பாகிஸ்தான், இலங்கை, கனடா, நியூஜிலாந்து ஆகியவை மறைந்த அவையில் இப்பொறுப்பை ஏற்கும்படியிருக்கும் என்றும் இங்கு கூறப்படுகிறது.

நீர்ப்பாசனம், ஹைட்ரோ, எலெக்டிரிஸிடி, ஜவுளித்தொழில் இவை சம்பந்தமான நிபுணர்களை உதவுவதாக இந்தியா ஒப்புக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இலங்கை, விவசாயம், பூக்கான் தொழில் நிபுணர்களை உதவ ஒப்புக் கொண்டிருக்கிறது.

டெக்னிகல்உதவிமிகவும் தேவையுள்ளநாடு இந்தோனேஷ்யாதான் என்று கூறப்படுகிறது.

கலகம் செய்த வெஸ்டர்லிங்

வெஸ்டர்லிங்கை தங்களிடம் ஒப்படைக்கும்படி, இந்தோனேஷ்ய சர்க்காரின் கோரிக்கையைக் சிங்கப்பூரிலுள்ள இந்தோனேஷ்ய பிரதிநிதி டாக்டர் கிடோயோ சிங்கப்பூர் சர்க்காரிடம் சமர்ப்பித்திருக்கிறார். இவ்விஷயமாக மேற்கொண்டு உத்திரவுகளை ஜகர்தாவிலிருந்துதான் எதிர்பார்ப்பதாக அவர் கூறுகிறார்.

புது வரி உயர்த்தப்படுகிறது

கோலாலம்பூர், மே. 21—

மலேயா நிர்வாகச் செலவுக்கு அதிக பணம் தேவையாக இருப்பதால் அந்தப் பெருவரத்தை விஸ்கி, பீர் முதலிய மதுவகைகள் காபி, சிகரெட் சம்பந்தம் கருவிகள் இவைகளுக்கு இறக்குமதி வரி அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இவைகளைப் பெற மலேயாவாசிகள் முன்னைவிட அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும். அத்தகைய வரி உயர்வால் இவ்வருஷம் ரூ. 50,000,00க்குமேல் வருமானம் கிடைக்கும் எனத் தெரிகிறது.

நேருவின் காஷ்மீர் விஜயம்

புதுடில்லி, மே. 21—

இந்தியா முதல் மந்திரி பண்டித நேரு காஷ்மீருக்கு விஜயம் செய்திருப்பது ஏதோ முக்கியம் உள்ளது என்ற பத்திரிகை செய்தியை அவ்வரசாங்க அதிகாரி ஒருவர் மறுத்திருக்கிறார்.

பண்டிதநேரு 9 மாதம் கழித்து காஷ்மீர் வந்திருக்கிறார் என்றும் ஓய்வு எடுத்துக்கொள்வதுடன் தேசிய மாநாட்டின் ஊழியர்களிடை பிரசங்கம் செய்துவிட்டு செல்வதைவிட வேறு அலுவல் எதுவும் காஷ்மீரில் பண்டித நேருவுக்கு இல்லை என்றும் அவர் கூறினார்.

ஐ.நா. மத்யஸ்தர் டிக்ஸன் பிரயாண திட்டம் பற்றிய தகவல் எதுவும் இன்னும் கிடைக்கவில்லை என்றும் நேரு இந்தோனேஷ்யா செல்லுமுன் டிக்ஸன் அவரை புதுடில்லியில் சந்திப்பார் என்று பத்திரிகைகளில் பார்த்ததாகவும் இதுவிஷயமாக மேற்கொண்டு தகவல் ஒன்றுமில்லையென்றும் கூறினார்.

தி. ந. தி. மு. க. தோழர்களுக்கு வேண்டுகோள்

7-5-50-ல் கூடிய திருச்சி நகர திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் ஜூன் மாதம் முதல் வாரத்தை உறுப்பினர்கள் சேர்க்கும் வாரமாகவும், அந்த நாட்களில் இயக்கப் பிரசாரம், பொதுக் கூட்டங்கள் நடத்துவதென்று தீர்மானித்திருக்கிறது.

அதற்கேற்ப நகர உட்கிளைத் தோழர்கள் அந்த வாரத்தை தீவிரமாக வீடுவீடாகச் சென்று உறுப்பினர்கள் சேர்க்கவும் ஆங்காங்கே பொதுக் கூட்டங்கள் மூலமாக இயக்கப் பணியைத் தீவிரமாகச் செய்யவேண்டுகிறேன்.

குறிப்பு:—பொதுக் கூட்டங்கள் நடத்த விரும்புபவர்கள் கிளைக் கழகக் காரியாலயத்தில் வந்து தெரிவிக்கவும்.

எம். எஸ். மணி.
செயலாளர்.

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

நன்கொடை சீட்டுகள் கிடைக்குமிடம்

ஆர். எச். ஆர். ரயில்வேஸ்டேஷனுக்கு எதிர்புறம், கோவை.

கே சிவசாமி. ஜவுளிக்கடை ரங்கே கவுண்டர் வீதி, கோவை.

என். பி. சாமி. நெய்மண்டி 5 முலைரோடு ராஜவீதி கோவை.

சோமு சைக்கிள் ஒர்க்ஸ் மில் ரோடு, கோவை.

எஸ். டி. சிதம்பரம் பிஸ்கட்பாக்டரி சுக்ரவாரப்பேட்டை வீதி கோவை.

ஹோட்டல் அருணோதயம் ஒப்பண்ணக்கார வீதி, கோவை.

மாநாட்டு அலுவலகம்

தண்ணீர் ஏற்பாடுகள்:
அசோகா பாக்குத்தூள் கம்பெனியார்

ஒலிபெருக்கி ஏற்பாடுகள்:
ராப்பி & Co திருச்சிராப்பள்ளி

ஈ. வெ. கி. சம்பத்.
வரவேற்புக்கழகத் தலைவர்

வ. ஆ. மா. தி. மு. க.

அமைப்பாளர்களுக்கும், கிளைக் கழக செயலாளர்களுக்கும் அறிவிப்பு

மாகாண மத்திய செயற்குழுவினரிடமிருந்து உறுப்பினர்கள் சேர்க்கும் ரசீது புத்தகங்கள் எனக்கு வந்துள்ளன. மாவட்ட அமைப்பாளர்களும் கிளைக் கழகச் செயலாளர்களும், என்னிடமிருந்து ரசீது புத்தகங்கள் பெற்று, அண்ணாதுரை அவர்களின் அறிக்கையின்படி, ஜூன் மாத இறுதிக்குள் உறுப்பினர்களைச் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம் மாவட்டக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்கள், தயவுசெய்து இம்மாத இறுதிக்குள் தங்களின் வருட சந்தா ரூ. 5-ஐ எனக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

கே. சுப்ரமண்யம்.
செயலாளர்,
வ. ஆ. மா. தி. மு. கழகம்,
வேலூர்.

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

காலம்:-மே 27, 28 சனி, ஞாயிறு

இடம்:-கோவை நகர் ஆர். எஸ். புரம் உயர்நிலைப் பள்ளித் திடலில் அமைந்துள்ள 'வள்ளுவர் பந்தல்'

★

தலைவர்:-புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

திறப்பாளர்:-நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி. எல்.

வ. க. தலைவர்:-தோழர் ஈ. வெ. கி. சம்பத்

★

இயல் அரங்கு சொற்பொழிவாளர்கள் :-

தோழர்கள் :—

ரா. மீனாட்சிசுந்தரம் எம். ஏ,
சி. பி. சிற்றரசு
புலவர். வெள்ளைவாரணனார்
என். வி. நடராசன்
புலவர் நன்னன்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
கா. அப்பாத்துரை எம். ஏ., எல்.டி.
மு. கருணாநிதி

புலவர் ஔவை. சு. துரைசாமி
ஏ. கே. வேலன்
கே. ஏ. மதியழகன் பி. ஏ.
ப. கண்ணன்
அ. பொன்னம்பலனார்
க. அன்பழகன் எம். ஏ.
ஏ. சித்தையன்
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
சி. என். அண்ணாதுரை எம்.ஏ.

★

இசையரங்கு இசைவாணர்கள்;-

என். எஸ். கிருஷ்ணன் குழுவினர்
வில்லுப்பாட்டு "வள்ளுவர் வரலாறு"
சி. எஸ். ஜெயராமன் குழுவினர்
[illegible] நமசிவாயம் குழுவினர்
இராசமாணிக்க பாகவதர் குழுவினர்

★

கூத்து அரங்கம் :-

'சந்திரமோகன்' (27-5-50 இரவு) 'நீதிதேவன் மயக்கம்' (28-5-50 இரவு)

நடிகர்கள்:-சி. என். ஏ., கே. ஆர். ஆர்., டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன், க. அன்பழகன், ஈ. வி. கே. சம்பத் ஈழத்தடிகள், மற்றும் பலர்

வரவேற்புறுப்பினர் நன்கொடை
கட்டணம் ரூ. 5—0—0
பிரதிநிதி .... ரூ. 2—0—0

மாநாட்டு வரவேற்புக் குழுவினர்.

விபசாரம் சூது இவைகளை ஒழிக்க முயற்சி

கொழும்பு, மே 21—

கொழும்பில் சூதாட்டம், விபசாரம் லைசென்ஸில்லாத மதுக்கடைகள் இவைகளை ஒழிக்க போலீசார் தீவிர நடவடிக்கை எடுக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

இலங்கைக்கு வரும் விஸிட்டர்கள் இந்த இடங்களில் தங்கள் பணத்தை பறிகொடுப்பதாகவும் அதை தடுக்கவே இம்முயற்சி செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது. —(குளோப்)

யார்க்ஷயரில் அம்மை கிலி

லண்டன், மே 21—

ஒருவருக்கு அம்மை கண்டது போல சந்தேகம் ஏற்பட்டவுடனேயே யார்க்ஷயரில்சுமார்50,000 பேர்களுக்கும் ஊசி குத்தப்பட்டது, பின்னர் அந்த நோயாளிக்கு கண்டது அம்மை அல்லவென்றும் ஏதோ சரும வியாதி என்றும் பின்னர் தெரிய வந்தது.

இரவில் சத்தம் போடாதே

பாரிஸ், மே. 21—

இரவில் சில அனாவசிய சத்தங்களை தடுக்கவேண்டும் என்று போலீஸ் அதிகாரி யோசனை தெரிவித்திருக்கிறார் இதன்படி இரவில் தெருவில் இரைந்துபாடிக்கொண்டு போவது, லாரிகளை வேகமாக ஓட்டுவது, மோட்டார் ஹாரனை அனாவசியமாக ஓசைப்படச்செய்வது முதலியன தடை செய்யப்படும் எனத் தெரிகிறது.

ஏஜண்டு தேவை

திருச்சியில் நமது "மாலை மணி"யை விற்பனை செய்ய முன் பணம் கட்டக்கூடிய பொறுப்புள்ள ஏஜண்டு தேவை!

நிர்வாகி,
"மாலைமணி"

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMarChetty Street, Madras-1.